FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

கணக்கீடு I

**Accounts I**

**Two Hours**

**Gr -13 (2021)**

**33** **T** **I**

**அறிவுறுத்தல்கள்:-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ***01* தொடக்கம் *30* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.**
- ***31* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.**

**சுட்டெண் :....................................**

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01. கணக்கீட்டின் முதன்மை நோக்கம் தொடர்பான மிகச் சரியான கூற்றானது.

1) நிறுவனமொன்றின் நிதிப்பெறுபேற்றினைக் கணிப்பிட்டுக் கொள்ளல்.
2) கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளை இனங்காணலும் அளவீடு செய்தலும்.
3) கொடுக்கல் வாங்கல்களின் உள்ளீடுகளைப் பயன்படுத்தி வெளியீடுகளைத் தயாரித்தல்.
4) அக்கறையுடைய தரப்பினருக்கு தீர்மானம் எடுத்தலுக்குத் தேவையான பொருளாதார தகவல்களை முன்வைத்தல்.
5) நிறுவனத்தின் முகாமைக்கு தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை முன்வைத்தல்.

(……….)

02. கணக்கீட்டுச் செயன்முறையில் காணப்படும் பின்வரும் படிமுறைகள் இடம்பெறும் சரியான ஒழுங்கு வரிசை எது?.

A – பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்துதல்.
B – கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணங்களைத் தயாரித்தல்.
C – கொடுக்கல் வாங்கல்களை மூலப் பதிவேடுகளில் பதிதல்.
D – பரீட்சை மீதியைத் தயாரித்தல்.
E – நாட்குறிப்புப் பதிவுகளைப் பேரேட்டுக்கு மாற்றுதல்.

1) B,C,A,E,D  2) B,C,E,A,D  3) B,C,E,D,A  4) C,B,E,A,D  5) C,B,D,E,A

(……….)

- **3,4,5 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சுதன் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

- 01.03.2021 சுரேனிடமிருந்து கடனுக்கு ரூ. 150,000 கிரயமான சரக்குகள் கொள்வனவு.
- 05.03.2021 சுரேனுக்கு ரூ. 30,000 கிரயமுடைய சரக்குகள் திருப்பி அனுப்புதல்.
- 20.03.2021 ரூ. 100,000 கிரயமுடைய சரக்குகள் ரூ. 160,000 இற்கு கடனுக்கு விற்பனை.
- 20.03.2021 ரூ. 10,000 ஆன மின் கட்டணக் கொடுப்பனவு
- 02.04.2021 சுரேனுக்குச் செலுத்த வேண்டிய முழுத்தொகையைக் கொடுத்துத் தீர்த்தல்.

03. 31.03.2021 இல் உள்ளவாறான சுதன் வியாபாரத்தில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் தேறிய தாக்கத்தினைக் காட்டும் கணக்கீட்டுச் சமன்பாடு.

| சொத்துக்கள் (ரூ) | = பொறுப்புக்கள் (ரூ) | + உரிமையாண்மை (ரூ) |
|---|---|---|
| 1) + 50,000 | - | + 50,000 |
| 2) + 60,000 | - | + 60,000 |
| 3) + 170,000 | + 120,000 | + 50,000 |
| 4) + 170,000 | + 150,000 | + 20,000 |
| 5) + 180,000 | + 120,000 | + 60,000 |

(……….)

04. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக 31.03.2021இல் உள்ளவாறான சுதனின் வியாபாரத்தின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகிய வற்றின் மீதிகளில் ஏற்படும் அதிகரிப்பு.

| கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ) |
|---|---|
| 1) 20,000 | 150,000 |
| 2) 20,000 | 160,000 |
| 3) 120,000 | 150,000 |
| 4) 120,000 | 160,000 |
| 5) 150,000 | 160,000 |

(……….)

05. சுரேனுடனான கொடுக்கல் வாங்கல்களை அவை இடம்பெற்றதன்படி சுதனின் வியாபாரத்தில் புத்தகங்களில் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஏடுகளின் ஒழுங்கு வரிவை.

1) விற்பனை நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு
2) கொள்வனவு, நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
3) விற்பனை நாளேடு, விற்பனைத் திரும்பல் நாளேடு, பொது நாளேடு
4) கொள்வனவு நாளேடு, விற்பனைத் திரும்பல் நாளேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு
5) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு.

(……….)

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 6,7ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

அனைத்து காசுப் பெறுவனவுகளும், காசுக் கொடுப்பனவுகளும் வங்கி மூலம் மேற்கொள்ளப்படும் வணிகத்தில் வங்கிக் கூற்றுப்படி மீதி ரூ. 32,000 செலவு மீதியாக காட்டியது. இம்மீதியானது வேறுபட்டமைக்கான ஒரே ஒரு காரணி வசூலிக்கப்படாத காசோலை ரூ. 18,000 ஆகும். மார்ச் மாதத்துக்கான காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு, காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு, வங்கிக் கூற்றுத் தகவல்களில் இருந்து திரட்டப்பட்டவை.

மார்ச் மாத காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின்படி மொத்தம் ரூ. 130,000
மார்ச் மாத காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின்படி மொத்தம் ரூ. 115,000
மார்ச் மாத வங்கிக் கூற்றில் வசூலிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ. 128,000
மார்ச் மாத வங்கி கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ. 102,000
மார்ச் மாத வங்கிக் கூற்றில் உள்ளடக்கி காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியாது விடுபட்டவை.

| | |
|---|---|
| வருமதியாளரது நேரடி வைப்பு | ரூ 9,000 |
| வங்கிக் கட்டணம் | ரூ 3,000 |

06. 2021 மார்ச் மாதம் மாற்றப்படாத காசோலைகள், வசூலிக்கப்படாத காசோலைகளின் சரியான பெறுமதி முறையே,

1) ரூ 13,000 ரூ 2000 2) ரூ 13000, ரூ 20,000 3) ரூ. 22,000, ரூ 12,000
4) ரூ. 16,000, ரூ. 20,000 5) ரூ 13,000, ரூ 16,000 (……….)

07. 2021 மார்ச் 31இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

1) ரூபா 71,000 2) ரூபா 56,000 3) ரூபா 27,000 4) ரூபா 22,000 5) ரூபா 20,000

(……….)

08. வாசனா வணிகம் தயாரித்த பரீட்சை மீதியின் கூட்டுத்தொகை பின்வருமாறு,

வரவு நிரலின் கூட்டுத் தொகை ரூ. 950,000

செலவு நிரலின் கூட்டுத் தொகை ரூ. 942,500

பின்னர் பின்வரும் வழுக்கள் இனங் காணப்பட்டன.

A - ரூ. 20,000 பெறுமானம் கொண்ட கடன் கொள்வனவுகள் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 50,000 எனப் பதிவு செய்யப்படல்.

B - ரூபா 190,000க்குக் கொள்வனவு செய்த இயந்திரமொன்று, ஏடுகளில் ரூபா 100,000 எனப் பதிவு செய்யப்படல்.

C - ரூபா 7500 மின்கட்டணக் கொடுப்பனவு மின்சாரக் கணக்கில் ரூபா 15,000 எனப் பதிவு செய்யப்படல்.

D - நானாவித வருமானம் ரூ. 7500 உரிய வருமானக் கணக்கில் பிழையான பக்கத்தில் அறிக்கைப்படுத்தப்படல்.

இவ்வழுக்களைத் திருத்தும்போது தொங்கற் கணக்கில் வரவில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களாவன.

1) B, D மாத்திரம் 2) B, C மாத்திரம் 3) A, B மாத்திரம்

4) C, D மாத்திரம் 5) A, D மாத்திரம் (……….)

09. தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியம் எனும் எண்ணக் கருவின் பிரயோகத்தினைப் பின்வரும் கணக்கீட்டுச் செயன்முறைகளுள் எது / எவை பிரதிபலிக்கின்றது / பிரதிபலிக்கின்றன?

A – நிறுவனமொன்றினால் செலுத்தவேண்டிய வருமான வரியினைப் பொறுப்பொன்றாக இனங்காணல்.

B – குத்தகை கொள்வோரின் நிதிக்கூற்றுக்களில் சொத்துப் பாவனை உரிமையினைச் சொத்தொன்றாக இனங்காணல்.

C – நிறுவனமொன்றின் உறுதியான கடப்பாடு ஒன்றினை அதன் பொறுப்பாக இனங்காணல்.

1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) C மாத்திரம்

4) B, C மாத்திரம் 5) A, B, C ஆகிய எல்லாம் (……….)

10. வியாபார வருமதிகள் சார்பாக சேதமுறும் நட்டத்திற்கு (அறவிடமுடியாக் கடன்) இடமளித்தலுக்கு மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவாக இருப்பது.

1) கணக்கீட்டு அலகுசார் எண்ணக்கருவாகும்.

2) பாதுகாப்பு எண்ணக்கருவாகும்.

3) முக்கியத்துவ எண்ணக்கருவாகும்.

4) தேறல் எண்ணக் கருவாகும்

5) வரலாற்றுக் கிரய எண்ணக் கருவாகும். (……….)

11. பின்வரும் தகவல்கள் வரையறுக்கப்பட்ட தீபா பொதுக்கம்பனிக்கு உரியது.

| | 2020.08.31 | 2019.08.31 |
|---|---|---|
| சென்மதி மின்சாரம் | 50,000 | - |
| முற்பணமாக செலுத்திய வாடகை | 12,000 | 80,000 |

வருட காலத்தில் காசோலை மூலம் செலுத்திய மின் கட்டணம் ரூ. 180,000 ஆக இருந்தது. அதேவேளை வாடகை மாதாந்தம் ரூ. 40,000 வீதம் செலுத்தப்பட்டு வருகின்றது. 2020.08.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தில் இலாப நட்டக்கூற்றில் காட்டப்படும் மின் கட்டணம் மற்றும் வாடகையாக செலுத்திய காசு பின்வருமாறு,

| | மின்சாரம் | வாடகை |
|---|---|---|
| 1) | 180,000 | 480,000 |
| 2) | 180,000 | 520,000 |
| 3) | 230,000 | 412,000 |
| 4) | 230,000 | 520,000 |
| 5) | 230,000 | 440,000 |

(……….)

12. கம்பனி ஒன்றில் 31.03.2021இல் இருந்த முழுச்சரக்குகளும் தீயினால் அழிவடைந்துள்ளது. 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| 01.04.2020இல் உள்ளவாறான சரக்கிருப்பு | 1500 |
| கொள்வனவுகள் | 3500 |
| கொள்வனவுத் திரும்பல்கள் | 500 |
| விற்பனைகள் | 4800 |
| விற்பனைச் செலவுகள் | 600 |

சரக்குகளை அவற்றின் கிரயத்தின் மீது 20% இலாபம் வைத்து விற்பனை செய்வது கம்பனியின் கொள்கையாகும்.

31.03.2021 இலுள்ளவாறு அழிவடைந்த சரக்குகளின் பெறுமதி யாது?

1) ரூ 500,000 2) ரூ 660,000 3) ரூ 750,000 4) ரூ 1,160,000 5) 1500,000

(……….)

13. உற்பத்தி நிறுவனமொன்றின் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான மூலக்கிரயம், மொத்த உற்பத்திக் கிரயம் என்பன முறையே ரூ 900,000, ரூ 1600,000 ஆகும், உற்பத்திக் கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள. நடைமுறை வேலைகளின் இருப்புக்கள் 31.03.2020, 31.03.2021 இல் முறையே ரூ. 200,000, ரூ 330,000 ஆக இருந்தன. 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம் யாது?

1) ரூ 570,000 2) 700,000 3) ரூ 830,000 4) ரூ 900,000 5) ரூ 1,030,000

(……….)

14. பாடசாலை அபிவிருத்திச் சங்கமொன்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புககள் பின்வருமாறு.

| விபரம் | 31.03.2021 இல் (ரூ. "000") | 31.03.2020 இல் (ரூ. "000") |
|---|---|---|
| காரியாலய உபகரணம் (கொண்டு செல் மீதி) | 750 | 800 |
| நிலுவையில் உள்ள சந்தா | 10 | 20 |
| வங்கியிலுள்ள காசு | 80 | 80 |
| நீண்ட கால வங்கிக் கடன் | 600 | 800 |
| முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | 50 | 40 |

*31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான மிகை அல்லது பற்றாக்குறை எவ்வளவு? (தேறிய சொத்துக்கள் அடிப்படையைப் பயன்படுத்துக.)*

*1) ரூ 130,000  2) ரூ 170,000  3) (ரூ 40,000)  4) (ரூ 170,000)  5) (ரூ 130,000)*

(……….)

15. பின்வரும் கூற்றுக்களில் *1890* பங்குடைமை நிலையியற் கட்டளையின் *24*ம் சரத்தில் உள்ளடங்கியிருப்பவை எவை?

A – பங்காளர்களுக்கிடையில் இலாப நட்டங்கள் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

B – பங்காளர்கள் அவர்களின் மூலதன மீதிகளுக்கான வட்டிக்கு உரித்துடையோர் ஆவர்.

C – பங்காளர்கள் சம்பளங்களுக்கு உரித்துடையவர்கள் அல்லர்.

D - இளைப்பாறிய பங்காளரின் தீர்க்கப்படாத மீதிக்கு வட்டி செலுத்தப்படலாம்.

1) A,C ஆகியன மாத்திரம்  2) B, D ஆகியன மாத்திரம்  3) A,B,C ஆகியன மாத்திரம்

4) A,C,D ஆகியன மாத்திரம்  5) B,C,D ஆகியன மாத்திரம்  (……….)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 16ஆம் 17ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

சனா, ஜனா, பங்குடைமை வணிகத்தின் *31.03.2021* இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் பின்வருமாறு.

**நடைமுறைக் கணக்கு**

| | சனா | ஜனா | | சனா | ஜனா |
|---|---|---|---|---|---|
| 31.03.2021 மீ/செ | 220,000 | 150,000 | 01.04.2020 மீ/ வ | 80,000 | 60,000 |
| | | | சம்பளம் | 50,000 | 40,000 |
| | | | மூலதன வட்டி 10% | 30,000 | 20,000 |
| | | | இலாப பங்கு | 60,000 | 30,000 |
| | **220,000** | **150,000** | | **220,000** | **150,000** |

16. பங்காளரிடையே பங்குடைமை ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தாது *1890* ஆம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் *24*ஆம் பிரிவின்படி, இப்பங்குடைமை வணிகம் செயற்படுமாயின் *31.03.2021* இல் முடிவடையும் வருடத்திற்கான ஜனாத்தின் இலாபப் பங்கு எவ்வளவு?

*1) ரூபா 45,000  2) ரூபா 70,000  3) ரூபா 90,000  4) ரூபா 115,000  5) ரூபா 185,000*

(……….)

17. *31.03.2021* இல் புதிய பங்காளராக கணா இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் அவர் ரூபா *100,000*வை மூலதனமாக பங்குடைமையில் முதலீடு செய்தார். இத்திகதியில் நன்மதிப்பின் பெறுமதி ரூபா *90,000* வாக மதிப்பிடப்பட்டது. சனா, ஜனா மற்றும் கணா மூன்று பேரும் சமமாக இலாப அல்லது நட்டத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத் தீர்மானித்தனர். நன்மதிப்புக் கணக்கொன்று ஏடுகளில் பேணப்படுவதில்லை என்பதுடன் நன்மதிப்புத் தொடர்பாக சகல சீராக்கங்களும் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படும். புதிய பங்காளர் இணைக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு பங்காளரினதும் சரியான உரிமையாண்மையினைக் காட்டுவது எது?

| சனா (ரூ) | ஜனா (ரூபா) | கணா (ரூ) |
|---|---|---|
| 1. 300,000 | 20,000 | 100,000 |
| 2. 330,000 | 200,000 | 70,000 |
| 3. 330,000 | 230,000 | 130,000 |
| 4. 360,000 | 320,000 | 100,000 |
| 5. 550,000 | 350,000 | 70,000 |

(……….)

18. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 (LKAS- 08) கணக்கீட்டுக் கொள்கை, மதிப்பீட்டு மாற்றம் மற்றும் வழுக்கள் நியமத்திற்கமைய பின்வரும் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கணக்கீட்டு மதிப்பீட்டிற்கு பொருந்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய தொகுதி எது?

A – வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகள்

B – நிதிச் சொத்துக்கள், பொறுப்புக்களின் நியாயமான பெறுமானம்.

C – கையிப்புக்கள் காலங் கடந்தவையாதல்.

D – உத்தரவாதக் கடப்பாடு

E – தேய்விடக்கூடிய சொத்துக்களின் பயன்படு ஆயுள்காலம்.

F – இருப்பு விலையிடல் கொள்கை.

1) A, B, C  2) B, C, D, E  3) C, D, F  4) A, D, E  5) A, B, D  (……….)

19. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றினால் 01.03.2021 இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்றுடன் தொடர்பானவை.

இக்கம்பனி பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதியப்பட்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| இயந்திரத்தின் பட்டியல் விலை | 800,000 |
| பெறுமதி சேர்வரி செலுத்தியது | 86,400 |
| போக்குவரத்துக் கிரயம் | 30,000 |
| அமைவிடம் தயாரித்தல் கிரயம் | 20,000 |
| நிர்மாணிப்புக் கிரயம் | 40,000 |
| ஆரம்ப பரிசோதனைக் கிரயம் | 50,000 |

கொள்வனவின்போது 10% வியாபாரக் கழிவு பெறப்பட்டது. ஆரம்ப பரிசோதனையின் போது உற்பத்தி செய்யப்பட்ட 100 அலகுகள் அலகொன்று ரூ. 300 ஆக விற்பனை செய்யப்பட்டது.

LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) இன்படி ஆரம்ப இனங்காணலில் இயந்திரத்தின் கிரயம்.

1) ரூ 830,000  2) ரூ 860,000  3) ரூ 896,400  4) ரூ 910,000  5) ரூ 916,400  (……….)

20. இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) – 37 இன்படி "நிகழத்தக்க பொறுப்பு" என்பதை இனங்காண்பதற்குப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கக்கூடிய பண்புகளில் சரியானது / சரியானவை.

A – கடப்பாட்டின் பெறுமானம் நம்பகரமாக அளவிடப்பட்டிருத்தல்.

B – கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு பொருளாதார அனுகூலமொன்றுடன் இணைந்த வளங்கள் வெளிச் செல்லக்கூடிய தன்மை காணப்படாது இருத்தல்.

C – நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக இனங்காணப்படாது நிகழத்தக்க பொறுப்பினைக் குறிப்பொன்றாக வெளிப்படுத்தல்.

1) A மாத்திரம்  2) B மாத்திரம்  3) A, C ஆகியன மாத்திரம்

4) B, C ஆகியன மாத்திரம்  5) A,B,C ஆகியன மாத்திரம்  (……….)

21. LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி பின்வருவனவற்றுள் எது / எவை உற்பத்தி நிறுவன மொன்றின் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படல் வேண்டும்?

A – வேறு நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சாதாரண பங்குகளுக்காக பங்குலாபமாகப் பெற்ற காசு

B – வேறு நிறுவனங்களின் தொகுதிக் கடன்களைக் கொள்வனவு செய்வதற்கு செலுத்தப்பட்ட காசு

C – குத்தகைப் பொறுப்பு ஒன்றினைத் தீர்ப்பதற்காகச் செலுத்தப்பட்ட காசு

1) B மாத்திரம்  2) C மாத்திரம்  3) A,B மாத்திரம்

4) B,C மாத்திரம்  5) A,B,C ஆகியன எல்லாம்.  (……….)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 22ஆம் 23ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

i) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் நிதிநிலைமைக் கூற்றுகளிலிருந்து பெயர்த் தெடுக்கப்பட்ட தகவல்களில் சில பின்வருமாறு.

| | **31.03.2021 இல் (ரூ. "000")** | **31.03.2020 இல் (ரூ. "000")** |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்குகள் | 4000 | 3,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் காணி | 500 | - |
| பொது ஒதுக்கம் | 1200 | 1000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 2500 | 2000 |

ii) 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான வரிச் செலவு வரிக்கு முன்னரான இலாபத்தில் 10% என மதிப்பிடப்பட்டிருந்தது.

iii) 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்காகச் செலுத்திய பங்கிலாபம் பா 200,000 ஆகக் காணப்பட்டதுடன் வருடத்தினுள் நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு தொகையொன்று மாற்றப்பட்டுள்ளது.

iv) கம்பனிக்கு சொந்தமான காணி 31.03.2021 இல் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தில் மீள்மதிப்பீட்டின்போது ரூபா 300000 மீள்மதிப்பீட்டு குறையொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. இம்மீள்மதிப்பீடு சரியாகப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

22. 31.03.2021இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் எது?

1) ரூ. 500,000 2) ரூ. 810,000 3) ரூ. 900,000
4) ரூ. 1000.000 5) ரூ. 2500,000 (……….)

23. 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான கம்பனியின் ஏனைய முற்று மடங்கிய வருமானம் எது?

1) ரூ. 200.000 2) ரூ. 300,000 3) ரூ. 500,000
4) ரூ. 800,000 5) ரூ. 900,000 (……….)

24. பின்வரும் தகவல்கள் ஓர் உற்பத்திக் கம்பனியுடன் தொடர்புடையவையாகும்.

| **31.03.2021 இல்** | | **31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான** | |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | விற்பனைகள் | ரூ. 600,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூ. 300,000 | மொத்த இலாப எல்லை | 25% |
| இருப்புக்கள் | ரூ. 120,000 | | |

01.04.2020 இல் இருப்புக்கள் ரூ. 180,000 ஆக இருந்தது.
கம்பனியின் விரைவு விகிதம் மற்றும் சரக்குப் புரள்வு விகிதம் என்பன எவை?

| **விரைவு விகிதம் (தடவைகள்)** | **சரக்குப் புரள்வு விகிதம் (தடவைகள்)** |
|---|---|
| 1) 0.4 | 3.75 |
| 2) 0.625 | 3 |
| 3) 0.625 | 4 |
| 4) 1.6 | 3 |
| 5) 1.6 | 4 |

(……….)

25. பின்வரும் தகவல்கள் வருடமொன்றில் உற்பத்திக் கம்பனியொன்றினால் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் ‘A’ தொடர்பானவை.

| | ஆகக் குறைந்தது | ஆகக்கூடியது |
|---|---|---|
| பாவனை (அலகுகள்) | 2000 | 5000 |
| விநியோகக் காலம் (மாதங்கள்) | 4 | 6 |

ஆகக்கூடிய சரக்கிருப்பு மட்டம் 42000 அலகுகள் ஆகும்.

இம்மூலப்பொருளின் மறுகட்டளை மட்டம். மறுகட்டளைத் தொகை என்பன.

| | **மறுகட்டளை (அலகுகள்)** | **மறுகட்டளைத் தொகை (அலகுகள்)** |
|---|---|---|
| 1) | 17,500 | 32,500 |
| 2) | 20,000 | 30,000 |
| 3) | 20,000 | 39,500 |
| 4) | 30,000 | 20,000 |
| 5) | 30,000 | 29,500 |

(……….)

26. முகாமைக் கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை?

A - இது முகாமையின் விருப்பத்தின் பேரில் நடாத்தப்படுகிறது.

B - இது அனைத்து அக்கறையுள்ளோரின் தேவைகளில் கவனம் செலுத்துகிறது.

C - இது எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்குப் பயன்படுத்தப்படும்.

D - இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகிறது.

1) A, B மாத்திரம் 2) A,C மாத்திரம் 3) A,B,C மாத்திரம்

4) A,C,D மாத்திரம் 5) A,B,C,D ஆகியன எல்லாம் (……….)

27. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருள் ஒன்றுடன் தொடர்பானவை?

| | **அலகொன்றிற்கான கிரயம் (ரூ)** |
|---|---|
| மொத்தக் கிரயம் | 250 |
| நேர்க்கியரம் | 60 |
| உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயங்கள் | 100 |

நேர்க் கிரயங்கள் எல்லாம் மாறுங் கிரயங்களாகும், மேலும் 50% ஆன உற்பத்தி மேந்தலைக் கிரயங்களும் 25% ஆன உற்பத்தியல்லா மேந்தலைகளும் மாறும் கிரயங்களாகும்.

இவ்வுற்பத்திப் பொருளின் அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் மற்றும் அலகொன்றிற்கான மாறும் கிரயம்.

| | அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் (ரூ) | அலகொன்றிற்கான மொத்த மாறும் கிரயம் (ரூ) |
|---|---|---|
| 1) | 105 | 120 |
| 2) | 105 | 130 |
| 3) | 150 | 105 |
| 4) | 150 | 120 |
| 5) | 150 | 130 |

(……….)

28. பின்வரும் பாதிடப்பட்ட தகவல்களானவை தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்றின் இயந்திர முடிவுறுத்தற் பிரிவுகளுடன் தொடர்பானவையாகும்.

| | **இயந்திரப் பிரிவு** | **முடிவுறுத்தற் பிரிவு** |
|---|---|---|
| அலகொன்றை உற்பத்தி செய்வதற்குச் செலவழித்த நேரம் | 6 இயந்திர மணித்தியாலங்கள் | 8 ஊழிய மணித்தியாலங்கள் |
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலம் | ஊழிய மணித்தியாலம் |
| | ஒன்றுக்கு ரூ. 30 | ஒன்றுக்கு ரூ. 40 |

அலகொன்றிற்கான பாதிடப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூ. 800 ஆகும். இப்பொருளின் அலகொன்றிற்கான பாதிடப்பட்ட மூலக் கிரயம் யாது?

1) ரூ. 300 2) ரூ. 480 3) ரூ. 500 4) ரூ. 620 5) ரூ. 730 (……….)

29. கிரயம் அளவு - இலாபம் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

A – சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் ஈட்டப்படும் பங்களிப்பானது இலாபத்தினைக் கொடுக்கும்.

B – சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்திற்குச் சமானதாகும்.

C – சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்தினதும் இலாபத்தினதும் கூட்டுத்தொகைக்குச் சமமானதாகும்.

D – சமப்பாட்டுப் புள்ளிக்குக் கீழ் நிலையான கிரயமானது மொத்தப் பங்களிப்பினைவிட அதிகமானதாகும்.

1) A,B ஆகியன மாத்திரம் 2) B,C ஆகியன மாத்திரம் 3) A,C,D ஆகியன மாத்திரம்

4) B,C,D ஆகியன மாத்திரம் 5) A,B,C,D ஆகியன எல்லாம் (……….)

30. செயற்றிட்டமொன்றின் ஆரம்ப முதலீடு ரூபா 500 மில்லியன்களாகும். மூன்று வருடங்களுக்கான தேறிய காசுப் பாய்ச்சல் மற்றும் 10% கழிவுக் காரணிகள் பின்வருமாறு.

| **வருடம்** | **தேசிய காசுப் பாய்ச்சல்** | **10% கழிவுக் காரணி** |
|---|---|---|
| 1 | 200 | 0.9 |
| 2 | 200 | 0.8 |
| 3 | 400 | 0.7 |

செயற்பாட்டின் முதலீடு திரும்பல் காலத்தையும் தேறிய நிகழ்காலப் பெறுமதியையும் சரியாகக் காட்டும் விடை எது?

| | **முதலீடு திரும்பல் காலம்** | **தேறிய நிகழ் காலப் பெறுமதி** |
|---|---|---|
| 1) | 2 வருடங்கள் | - 120 |
| 2) | 2 வருடங்களும் 3 மாதங்களும் | + 120 |
| 3) | 2 வருடங்களும் 4 மாதங்களும் | + 120 |
| 4) | 3 வருடங்களும் 1 மாதமும் | + 100 |
| 5) | 3 வருடங்கள் | + 100 |

(……….)

❖ ***31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.***

31. நிதிக் கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) பிழையா (F) என்பதைக் குறிப்பிடுக.

A – நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்டதிட்டங்களுக்குட்பட்டதாகும். (……….)

B – நிதிக் கணக்கீட்டின் மூலம் வணிக நிறுவனமொன்றின் வரலாற்று ரீதியான மற்றும் எதிர்காலத் தகவல்கள் வழங்கப்படும். (……….)

C – நிதிக் கணக்கீட்டின் மூலம் உள்ளக மற்றும் வெளியகப் பிரிவினர்களுக்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படும். (……….)

D – நிதிக் கணக்கீட்டின் மூலம் நிறுவன முகாமையாளர்களுக்குத் தீர்மானமெடுப்பதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படும். (……….)

32. சரன் என்பவர் 01.04.2020 இல் ரூ. 500,000ஐ காசாக முதலீட்டு வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இவ்வருடத்தில் சரன் வியாபாரத்திற்காக ரூ. 200,000 பெறுமதியான பிரதி பண்ணும் இயந்திரத்தை வழங்கியுள்ளதுடன் ரூ. 50,000 ஐ வியாபாரத்திலிருந்து பற்றாக எடுத்திருந்தார். இவ்வியாபார மானது 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் ரூ. 120,000ஐ இலாபமாக உழைத்துள்ளது.

அ) 31.03.2021 இல் இவ்வியாபாரத்தின் உரிமையாண்மையை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் இரு உருப்படிகளை (பெறுமதியுடன்) குறிப்பிடுக.

1) ………………………………………….. 2) ……………………………………………….

ஆ) 31.03.2021 இல் வியாபாரத்தின் தேறிய சொத்துக்கள் யாவை?

ரூ. ………………………………………………………………………………………………

33. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்களையும் மூல ஏடுகளையும் குறிப்பிடவும்.

| **கொடுக்கல் வாங்கல்** | **மூல ஆவணம்** | **மூல ஏடு** |
|---|---|---|
| A. மூலதனமிடல் காசு ரூபா 1000,000 | | |
| B. சம்பளக் கொடுப்பனவு ரூபா. 5000 | | |
| C. சரவணனுக்கு விற்பனை ரூபா 15,000 | | |
| D. ரூபா 2,000 பெறுமதியான சரக்குகளை திருப்பி அனுப்புதல். | | |

34. வணிகமொன்றின் சில்லறைக்காசு கட்டுநிதி தொடர்பிலான தகவல்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| சில்லறைக் காசு கணக்கு மீதி | 2021.01.01 | ரூ. 800 |
| | 2021.01.31 | ரூ. 400 |
| கட்டுநிதி மீள்நிரப்பல் | 2021.01.01 | ரூ. 2200 |

சில்லறைக்காசு கட்டுநிதி மீள்பெறுமதி ரூ. 500 ஆல் அதிகரிக்கப்படுமாயின் 2021.02.01ம் திகதியில் மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு?…………………………………………………………

35. கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

| | கூற்று | சரி/பிழை |
|---|---|---|
| A | குறித்த கால வரையறையினுள் உழைக்கப்பட்ட இலாபம் / நட்டத்தைக் கணிப்பதற்காக வருமானங்களும் அவற்றை ஈட்டுவதற்காக மேற்கொண்ட செலவுகளையும் தொடர்புபடுத்துவது இணைதல் எண்ணக்கருவிற்கு அமைவாகவாகும். | (…..…….) |
| B | வருட இறுதியில் காணப்படும் மூலப் பொருள்களை கிரயத்தினதும், தேறிய தேறத்தக்க பெறுமதியினதும் குறைவான பெறுமதியில் மதிப்பிடல் பாதுகாப்பு எண்ணக் கருவிற்கு அமைவாகும். | (…..…….) |
| C | சரக்கிருப்பை மதிப்பீடு செய்வதற்காக "முதல் உள் - முதல் வெளி" விலையிடல் முறையினைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துதல் கால அளவு எண்ணக் கருவிற்கு அமைவாகும். | (…..…….) |
| D | குத்தகைக்கு எடுத்த கட்டடத்தை குத்தகைக்கு எடுத்தவரின் புத்தகங்களில் சொத்தொன்றாகப் பதிதல் வரலாற்றுக் கிரய எண்ணக் கருவிற்கு அமைவாகும். | (…..…….) |

36. சக்தி விளையாட்டுக்கழகம் 100 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த சந்தா ரூபா 4800 ஆகும். பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| விபரம் | 31.03.2021 | 31.03.2020 |
|---|---|---|
| முற்பணமாகப் பெற்ற சந்தா | 48,000 | 24,000 |
| நிலுவையாகவுள்ள சந்தா | 72,000 | 96,000 |

இவ்விளையாட்டுக் கழகத்தின் பின்வருவனற்றைக் குறிப்பிடுக.

அ) 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான இனங்காணப்பட்ட சந்தா வருமானம் ……………..

ஆ) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் பெற்ற மொத்த சாந்தா ……………………..……….

37. 2021.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் சாராவின் வணிகத்தின் கணிக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 125,000 ஆகும். இந்நிதியாண்டுக்காகப் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| பெறுமானத் தேய்வு தவிர்ந்த செயற்பாட்டுச் செலவுகள் | 75,000 |
| பெறுமானத்தேய்வு | 25,000 |
| நிதியாண்டு விற்பனைகள் | 725,000 |

அ) விற்பனைக் கிரயம் எவ்வளவு? ……………………………………………………….…………

ஆ) மொத்த இலாபம் எவ்வளவு? ……………………………………………………………….

38. பங்குடைமை தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (T) அடையாளத்தையும் பிழையாயின் (F) அடையாளத்தையும் இடுக.

A பங்குடைமை வணிகமொன்றின் உச்ச அங்கத்தவர் எண்ணிக்கையானது பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின்படியே தீர்மானிக்கப்படுகின்றது. (………)

B எழுத்து மூல ஒப்பந்தமொன்றுள்ள பங்குடமை வணிகமொன்றின் குறித்த பங்காளர் ஒருவர் ஈடுபடுத்தியுள்ள மேலதிக மூலதனத்திற்கு 5% வருடாந்த வட்டியொன்று செலுத்துதல் வேண்டும். (………)

C பங்குடைமை வணிகத்தின் உரிமையில் மாற்றமொன்று ஏற்படும் திகதியில் மதிப்பீடு செய்யப்படுகின்ற நன்மதிப்பானது மூலதனக் கணக்கில் சீராக்கப்படுவ தனால் மொத்த உரிமையாண்மையில் மாற்றமொன்று ஏற்பாடாது. (………)

D பங்குடைமை வணிகம் பங்காளரொருவரின் சொந்தக் கட்டடமொன்றில் நடத்திச் செல்வதற்காக அவருக்குச் செலுத்தும் கட்டட வாடகையினை இலாபம் பகிர்வொன்றாகக் கருதமுடியும். (………)

39. பின்வரும் தகவல்கள் இலாப அல்லது நட்டத்தைச் சமமாகப் பகிரும் பாலன், சீலன் ஆகியோரின் பங்குடைமையுடன் தொடர்பானவையாகும்.

| நடைமுறைக் கணக்கு மீதிகள் | | |
|---|---|---|
| | **31.03.2021 இல் (ரூபா "000")** | **31.03.2020 இல் (ரூபா "000")** |
| பாலன் | 750 | 500 |
| சீலன் | 450 | 300 |

பங்குடைமை ஒப்பந்தத்தின்படி பாலன் வருடாந்த சம்பளமாக ரூ. 150,000 ஐப் பெறுவதற்கு உரித்துடையவர். இவ்வருடத்தில் பாலன், சீலன் ஆகியோர் முறையே ரூ. 100000, ரூ. 50000ஐ காசாகப் பற்றியிருந்தனர்.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடைமையின் இலாபம் ரூபா …………………

ஆ) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான பாலன், சீலன் ஆகியோரின் இலாபப் பங்கு

பாலன் ரூபா …………………………….. சீலன் ரூபா …………………………………….

40. சாருஜா 01.04.2020 இல் மூலதனமாக ரூபா 2000,000ஐ முதலீடு செய்து வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இவர் இத்தொகையில் 90%ஐப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவழித்துள்ளதுடன் இப்பொருட்களைக் கிரயத்தில் 30%ஐக் கூட்டி விற்பனை செய்துள்ளார். இவ்வியாபாரத்தின் தேறிய சொத்துக்கள் 31.03.2021 இல் 2400000 ரூபாவாகும். இவ்வாண்டு காலத்தில் மேலதிக மூலதனமோ பற்றுகளோ மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2021 இல் முடிவடைந்த காலத்திற்கான பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) இலாபம் ………………………….. ஆ) செயற்பாட்டுச் செலவினங்கள்……………………...

41. வரையறுக்கப்பட்ட சுபோ பொதுக் கம்பனியானது ரூ. 5000000 பெறுமதி கொண்ட மோட்டார் வாகனமொன்றை 01.04.2020 இல் வரையறுக்கப்பட்ட களனி பொதுக் கம்பனியிடமிருந்து குத்தகை முறையில் கொள்வனவு செய்தது.
குத்தகைக் காலம் 7 வருடங்களாகும், குத்தகைக் கடன் கொடுப்பனவானது சமமான தவணைகளில் செலுத்தப்படும்.

31.03.2021இல் செலுத்தப்பட்ட முதலாவது தவணைக் கட்டணம் ரூ. 1000,000ஆகும் (இத்தவணைக் கட்டணத்தினுள் வட்டி ரூபா 120,000வும் உள்ளடங்கியுள்ளது)
இரண்டாவது வருடத்தின் வட்டிச் செலவு ரூபா 100,000 ஆகும்.

மேலே தரப்பட்ட தகவல்களுக்கேற்ப 31.03.2021 இல் வரையறுக்கப்பட்ட சுபோ பொதுக் கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றினுள் உள்ளக்கப்படவேண்டிய பின்வரும் உருப்படிகளின் பெறுமதிகளைத் தருக.

1. நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் : (ரூபா) ..........................................................
2. நடைமுறை பொறுப்பு : (ரூபா) ..........................................................

42. இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியா (T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

A. கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களானவை கடந்த காலங்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் கணக்கு வைக்கப்படும். ..................................................

B. ஏற்பாடுகளானவை நிச்சயமற்ற காலம் அல்லது தொகையுடன் கூடிய சாத்தியமான கடப்பாடுகளாகும். ..................................................

C. SLFRS - 15 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தன வருவாய்) இன்படி வாடிக்கையாளர் ஒருவனுடனான ஒப்பந்தமொன்று பல்வேறு 'செயற்றிறன் கடப்பாடுகளை' உள்ளடக்கியிருக்கமுடியும்.

..................................................

D. LKAS - 16 இன் அடிப்படையில் சொத்தின் பெறுமதியை மதிப்பிடும்போது பரீட்சார்த்தக் கிரயம் உள்ளடக்கப்படுவதில்லை. ..................................................

43. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்களைச் சீராக்கம் செய்வதனால் அவை இலாபத்தில் அதிகரிப்பினையா (I) அல்லது குறைவினையா (D) அல்லது மாற்றங்களை ஏற்படுத்தாதா (NC) என்பதைக் குறிப்பிடுக. (இவ்விடயங்கள் புத்தகங்களில் இன்னமும் சீராக்கப்படவில்லை)
இலாபத்தில் தாக்கம் - I, D, NC எனக் குறிப்பிடுக.

(A) கடந்த ஆண்டு முற்பணமாகப் பெற்ற வாடகை வருமானத்தை வருமானமாக இனங்காணல். ..................................................

(B) முற்பணமாக பெற்ற விற்பனை வருமானம் ..................................................

(C) முதல் தடைவ ரூபா 300,000 மிகையாக மதிப்பிடப்பட்ட நிலம் தற்போது ரூபா. 100,000 குறைத்து மதிப்பிடல் ..................................................

(D) இருப்புக்களின் கிரயமப் பெறுமதியினைவிட இருப்பு தேறிய நிகரத்தக்க பெறுமதி குறைதல். ..................................................

44. கம்பனியொன்றில் 01.04.2020 இலுள்ள கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனமானது பங்கொன்று ரூபா 100 இல் வழங்கப்பட்ட 100,000 பங்குகளைக் கொண்டுள்ளது. இத்திகதியில் கம்பனியானது ரூபா 800,000 நிறுத்தி வைத்த வருவாயினைப் பயன்படுத்தி பங்கு ஒன்று ரூபா 80 விலையில் மூலதனமாக்கியுள்ளது. மேலும் 31.03.2021 இல் காணப்படும் ஒவ்வொரு பதினொரு பங்குகளுக்கும் ஒரு பங்கு வீதம் பங்குகளுக்கான உரிமை வழங்கலானது பங்கொன்று ரூபா 60 விலையில் வழங்கப்பட்டது. தற்போதுள்ள எல்லாப் பங்குதாரரும் உரிமை வழங்கலை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளார். பின்வருவனவற்றை கணிக்குக.

அ) 31.03.2021 இலுள்ளவாறு உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா ……………………….

ஆ) உரிமை வழங்கலின் மூலம் பெறப்பட்ட காசு ரூபா ……………………………………………..

45. 31.03.2021 இல் கம்பனியொன்றின் நடைமுறை விகிதம் 2.5:1 ஆகவும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ.120,000 ஆகவும் காணப்படுகிறது. இத்திகதியில் கம்பனியிடம் ரூ. 180,000 பெறுமதியான சரக்கிருப்பு காணப்படுமாயின்:

அ) 31.03.2021 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி யாது?.....................................

ஆ) 31.03.2021 இல் வரைவு விகிதம் யாது? …………………………………………………………..

46. X,Y எனும் வகையில் இரு திணைக்களங்களுடன் கூடிய உற்பத்தி நிறுவனமொன்றின் உறிஞ்சுதல் விகிதம் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

X இயந்திரம் மணித்தியாலத்திற்கு ரூ. 20

Y உழைப்பு மணித்தியாலத்திற்கு ரூ. 25

அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு இரண்டு இயந்திர மணித்தியாலங்களும் நான்கு ஊழிய மணித்தியாலங்களும் தேவையாக உள்ளது. வருடத்தினுள் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அலகுகளின் எண்ணிக்கை 6000 ஆகும்.

அ) இந்நிறுவனத்தின் மொத்த மேந்தலைக் கிரயம் ரூபா ……………………………………………

ஆ) அலகொன்றிற்கான உறிஞ்சுதல் மேந்தலைக் கிரயம் ரூபா. ……………………………………..

47. கம்பனியொன்று A எனும் தனிப்பொருளை உற்பத்தி செய்கின்றது. பின்வரும் தகவல்கள் அதன் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப் பொருளொன்றுடன் தொடர்பானவையாகும்.

மூலப் பொருட்களின் வருடாந்த நுகர்வு 15,000 அலகுகள்

கட்டளைக் கிரயம் கட்டளையொன்றுக்கு ரூ. 300

இருப்பு வைத்திருக்கும் கிரயம் அலகொன்றுக்கு ரூபா 100

அ) இம்மூலப்பொருளின் சிக்கன கட்டளைத் தொகை E,O,Q …………………………………………..

ஆ) கட்டளைகளின் எண்ணிக்கை ……………………………………………………………………

48. பின்வரும் ஊழியர் கொடுப்பனவுகள் தொடர்பில்பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணங்களை முன்னாலுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

**மூல ஆவணம்**

1) அடிப்படைச் சம்பளம் ……………………………………

2) மேலதிகக் கொடுப்பனவு ……………………………………

3) EPF ……………………………………

4) சம்பள முற்பணம் ……………………………………

49. கம்பனியொன்று தமது உற்பத்திப் பொருள்கள் தொடர்பில் பின்வரும் தகவல்களை வழங்கியுள்ளது.

அலகொன்றின் விற்பனை விலை ரூபா 120

அலகொன்றின் மாறும் கிரயம் ரூபா 80

சமப்பாட்டுப் புள்ளியில் அலகுகளின்

எண்ணிக்கை 10,000 அலகுகள் உத்தேச இலாபம் ரூபா 120,000

அ) கம்பனியின் இலாப எல்லை விகிதம் எவ்வளவு?……………………………………

ஆ) கம்பனியின் பாதுகாப்பு எல்லை (அலகுகள்) எவ்வளவு?……………………………………

50. வரையறுக்கப்பட்ட மீனா கம்பனி இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கின்றது. இயந்திரத்தின் கிரயம் ரூபா 500,000 ஆக இருப்பதோடு ஐந்து வருட இறுதியில் அதன் இழிவுப் பெறுமானம் ரூபா 100,000 ஆகும். அம்முதலீட்டிற்கான ஐந்து வருட இறுதியில் இலாபம் / நட்டம் பின்வருமாறு.

| வருடம் | இலாபம் (நட்டம்) (ரூபா) |
|---|---|
| 1 | 60,000 |
| 2 | 40,000 |
| 3 | 50,000 |
| 4 | (30,000) |
| 5 | 30,000 |

இம் முதலீட்டின் கணக்கீட்டு வருவாய் வீதம் எவ்வளவு?……………………………………

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கீடு II | Three Hours | 33 | T | II |
| Accounts II | Gr -13 (2021) | | | |

**அறிவுறுத்தல்கள்:**

- முதலாம்,இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.

*01. வரையறுத்த* ***சந்திரன் PLC*** *இன்* ***31.03.2021*** *உள்ளவாறான* ***சுருக்கிய பரீட்சை மீதியானது*** *கீழே தரப்பட்டுள்ளது.*

| விபரம் | வரவு (ரூ "000" | செலவு (ரூ "000") |
|---|---|---|
| விற்பனை | | 84,000 |
| விற்பனைகிரயம் | 52,500 | |
| 01.04.2020 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கொண்டு செல் தொகை | 34,500 | |
| வியாபார வருமதிகள் | 6,200 | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 4,500 |
| நிர்வாக செலவுகள் | 7,400 | |
| விநியோகக் கிரயங்கள் | 6,200 | |
| 01.04.2020இல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | | 2,000 |
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்குகள் | | 25,000 |
| 01.04.2020 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 4,500 |
| நிதிக்கிரயங்கள் | 3,200 | |
| ஏனைய செலவுகள் | 1,400 | |
| குத்தகை பொறுப்பு | | 4,300 |
| 01.04.2020 இல் நிலத்தின் மீதான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 2,000 |
| சொத்துப் பாவனை உரிமை | 5,500 | |
| செலுத்திய வருமான வரி | 1,200 | |
| 01.04.2020 இல் வருமானவரிகள் ஏற்பாடு | | 500 |
| 31.03.2021 இல் இருப்புகள் | 4,400 | |
| 31.03.2021 காசும் காசுக்கு சமனானவையும் | 4,300 | |
| | **126,800** | **126,800** |

**மேலதிக தகவல்கள்:-**

***31.03.2021 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு***

*முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.*

i) *2021.03.31 இல் காணப்படுகின்ற சரக்கிருப்புக்களில் உள்ளடங்கியுள்ள ரூ. 100,000 பெறுமதி யான ஒரு தொகுதி சரக்கிருப்புக்கள் பழுதடைந்து காணப்படுகின்றன. இவற்றை ரூ 80,000 இற்கு விற்பனை செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

ii) *2020.04.01 தொடக்கம் முதல் 15 மாதங்களுக்கு செலுத்தப்பட்ட ரூ. 150000 வாடகையானது நிர்வாக செலவினுள் உள்ளங்கியுள்ளது.*

iii) *கம்பனியானது 01.06.2020 இல் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் விற்பனைக்குப் பின் பராமரிப்பு சேவை வழங்குவதற்குமென வாடிக்கையாளர் ஒருவருடன் 1 வருட கால ஒப்பந்த மொன்றை மேற்கொண்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தில் மொத்தக் கைமாறு ரூ. 1200,000 ஆகும். இவ் மொத்தப் பெறுமதியில் ரூ. 900,000 விற்பனையுடனும் மிகுதி பராமரிப்பு சேவையுடனும் தொடர்புடையதாகும். அத்தினத்தில் இச்சொத்து வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப் பட்டதுடன் சட்டரீதியான உரிமையும் மாற்றம் செய்யப்பட்டது. இம்மொத்தக் கைமாறானது பெறப்பட்டு விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.*

iv) *பின்வரும் தகவல்களானது 01.04.2020 இல் உள்ளவாறான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடையதாகும்.*

| சொத்து | கிரயம்/ மீள்மதிப்பீட்டு தொகை (ரூ "000") | திரண்ட பெறுமான தேய்வு (ரூ "000") | தொகை செல்தொகை (ரூ "000") |
|---|---|---|---|
| நிலம் | 25,000 | - | 25,000 |
| கட்டிடங்கள் | 9,000 | 2,400 | 6,600 |
| அலுவலக உபகரணங்கள் | 4,000 | 1,100 | 2,900 |
| | **38,000** | **3,500** | **34,500** |

*ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களிற்கு பின்வருமாறு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.*

கட்டிடம் 5%

அலுவலக உபகரணம் 10%

*நிலமானது 01.04.2020இல் இரண்டாவது தடவையாக ரூ. 24000,000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இன் நிலமானது 31.03.2018ல் முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இம்மீள்மதிப்பீட்டு மிகையானது நிலம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான பதிவுகள் எவையும் கணக்கில் இடப்படவில்லை.*

*31.03.2021ல் கட்டிடமானது ரூ. 6000,000 என முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.*

*01.10.2020 ரூ. 1500,000 கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணமானது கொள்வனவு கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும்.*

v) *கம்பனியானது விநியோக நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்காக மோட்டார் வாகனம் ஒன்றை 01.04.2020ல் நிதிக் குத்தகையின் கீழ் குத்தகை உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளது. இம் மோட்டார் வாகனத்தின் நியாயமான பெறுமதி ரூ. 5500,000 ஆகவும் குத்தகை தவணைக் கட்டணம் ரூ. 1200,000 ஆகவும் காணப்படுகின்றது. இதன் குத்தகைக்காலம் பயன்தரு ஆயுட் காலம் என்பன 5 வருடங்கள் ஆகும் நடைமுறை வருடத்திற்கான குத்தகை தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டு குத்தகை பொறுப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. 01.03.2021லும் 31.02.2022லும் முடிவடையும் வருடங்களுக்கான குத்தகை வட்டிகள் முறையே ரூ. 326000, ரூ. 274000 ஆக காணப்படுகின்றது.*

vi) இக்கம்பனியானது பொருட்களை ஒருவருட உத்திரவாதத்துடன் விற்பனை செய்கின்றது. சென்ற வருட உத்தரவாதம் தொடர்பில் இவ்வருடம் செலுப்பத்தபட்ட ரூ 1,800,000 ஆனது நடைமுறை வருடத்திற்கான விநியோக கிரயத்தினுள் உள்ளடங்கியுள்ளது. 31.03.2021ல் உத்தரவாதத்துக்கான ஏற்படானது ரூ 2,300,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

vii) செலுத்திய வருமான வரியானது முன்னைய வருடத்திற்காக செலுத்திய ரூ. 480,000 இனையும் நடைமுறை வருடத்திற்கான முதல் மூன்று காலாண்டுகளுக்கான கொடுப்பனவு களையும் உள்ளடக்கியுள்ளது. நடைமுறை வருடத்திற்கான இறுதி காலாண்டு வருமானவரி பொறுப்பானது ரூ. 420,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

viii) இவ்வருடத்தில் ரூ 4,000,000 பெறுமதியான சாதாரண பங்குகள் வழங்கப்பட்டு முழுத்தொகையும் பெறப்பட்டது. இவை கணக்குகளில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ix) ***31.03.2021*** இல் இயக்குநர்கள் ரூ.400,000இனை கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்கு பங்குலாபமாக முன்மொழிந்துள்ளனர்.

**வேண்டப்படுவது,**

LKAS I (நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்) இதன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான வரையறுத்த சந்திரன் பொதுக் கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புகள் உட்பட)

1) 31.03.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2) 31.03.2021இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று.
3) 31.03.2021இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று.

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) i) வரையறுத்த மாதவன் கம்பனியின் பூரணப்படுத்தப்படாத களஞ்சியப் பேரேடு

| | **பெறுவனவு** | | | **விநியோகங்கள்** | | | **மீதி** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **தொகை (அலகுகள்** | **அலகு விலை (ரூ)** | **பெறுமதி (ரூ)** | **தொகை (அலகுகள்)** | **அலகு விலை (ரூ)** | **பெறுமதி (ரூ)** | **தொகை (அலகுகள்)** | **பெறுமதி (ரூ)** |
| யூன் 1 | | | | | | | 100 | 2,000 |
| யூன் 5 | 200 | 23 | ? | | | | ? | ? |
| யூன் 8 | | | | 250 | ? | ? | ? | ? |
| யூன் 14 | 200 | 25 | ? | | | | ? | ? |
| யூன் 19 | | | | 150 | ? | ? | ? | ? |
| யூன் 24 | 200 | 28 | ? | | | | ? | ? |
| யூன் 30 | | | | 125 | ? | ? | ? | ? |

ii) உற்பத்தித் தளத்தில் யூன் 1 இல் 60 அலகுகளும் யூன் 30ல் 15 அலகுகளும் மீதி மூலப்பொருட்கள் காணப்பட்டன.

iii) நாளொன்றுக்கான அதிகூடிய பாவனை 25 அலகுகள் ஆகும்.

iv) அதிகூடிய விநியோகக் காலம் 10 நாட்கள் ஆகும்.

**வேண்டப்படுவது.**

i) நிறையளிக்கப்பட்ட சராசரிக் கிரய முறையின் அடிப்படையில் மேற்காட்டப்பட்ட அட்டவணை யைப் பூர்த்திசெய்க.
ii) மீள் கட்டளை தொகை
iii) மீள் கட்டளை மட்டம்

iv) உற்பத்தி தளத்தில் நாளொன்றுக்கான சராசரி நுகர்வு?

v) முதல் - உள் - முதல் - வெளி அடிப்படையில் 30 யூனில் காணப்படுகின்ற இருப்பின் கிரயத்தை காண்க?

(15 புள்ளிகள்)

ஆ) ஆதவன் கம்பனியானது X,Y என்ற இரண்டு வகையான பொருட்களை உற்பத்தி செய்கின்றது. இவ்விரு பொருட்களும் இணைத்தல், முடிவுறுத்தல் பகுதியின் ஊடாக உற்பத்தி செய்யப் படுகின்றது. மேலும் இப்பகுதிகளுக்கு உதவி வழங்குவதற்காக பராமரிப்பு பகுதியினையும் கொண்டுள்ளது. உற்பத்தி பகுதிகள் ஒரே இடத்திலும் பராமரிப்புப் பகுதி வேறொரு இடத்திலும் காணப்படுகின்றது. அடுத்த நிதியாண்டுக்கான பாதீடப்பட்ட தகவல்கள் வருமாறு.

| **மேற்றலைகள்** | ரூ *"000"* |
|---|---|
| வாடகை | |
| உற்பத்தி பகுதி | *420* |
| பராமரிப்பு பகுதி | *200* |
| மின்சாரம் | |
| உற்பத்தி பகுதி | *160* |
| பராமரிப்பு பகுதி | *80* |
| நேரில் கூலிகள் | |
| இணைத்தல் பகுதி | *600* |
| முடிவுறுத்தல் பகுதி | *250* |
| பராமரிப்பு பகுதி | *140* |
| பாதுகாப்பு சேவை கட்டணம் | *360* |
| இயந்திர காப்புறுதி | *60* |
| ஊழியர் நலன்புரி | *90* |
| உற்பத்தி முகாமையாளர் சம்பளம் | *80* |

**மேலதிக தகவல்கள்**

*1)*

| **விபரம்** | **இணைத்தல்** | **முடிவுறுத்தல்** | **பராமரிப்பு** |
|---|---|---|---|
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) | *18,000* | *24,000* | *12,000* |
| இயந்திரக் கிரயம் | *300,000* | *200,000* | - |
| ஊழியர் எண்ணிக்கை | *150* | *100* | *50* |
| கிலோவாற் மணித்தியாலயம் | *3,000* | *1,000* | *200* |
| பாதுகாப்பு ஊழியர் எண்ணிக்கை | *40* | *30* | *20* |
| இயந்திர மணித்தியாலம் | *20,000* | *8,000* | - |
| ஊழிய மணித்தியாலம் | *1,200* | *10,000* | |

*2)* உற்பத்தி முகாமையாளர் சம்பளமானது உற்பத்திப் பகுதிகளுக்கிடையில் சமனானதாக பகிரப்படல் வேண்டும்.

*3)* இயந்திரத்துக்கு கிரயத்தில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும்.

*4)* பராமரிப்பு பகுதியின் மேந்தலைக்கிரயமானது உற்பத்தி பகுதி X, Y ஆகியவற்றுக்கிடையில் *3 : 2* என்ற வீதத்தில் மீள் பகிர்வு செய்யப்படல் வேண்டும்.

*5)* மேந்தலைகளை உறிஞ்சுவதற்கு இணைத்தல் பகுதியும் முடிவுறுத்தல் பகுதியும் முறையே இயந்திர மணித்தியாலங்களையும் ஊழிய மணித்தியாலங்களையும் பயன்படுத்துகின்றது.

6) பின்வருவன கம்பனியில் உற்பத்தி செய்யப்படும் X, Y ஆகிய இரண்டு வகையான உற்பத்திப் பொருட்களுடன் தொடர்பானதாகும்.

| விபரம் | X | Y |
|---|---|---|
| அலகு ஒன்றிற்கான முதன்மைக்கிரயம் (ரூ) அலகு ஒன்றிற்கு தேவைப்படும் மணித்தியாலங்கள் (பாதிடப்பட்டது) | 400 | 480 |
| • இயந்திர மணித்தியாலங்கள் | 4 | 5 |
| • நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 3 | 5 |

**வேண்டப்படுவது :-**

1) பூரணப்படுத்தப்பட்ட மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (பராமரிப்பு பகுதியின் மேந்தலை கிரயத்தின் மீள் பகிர்வு உட்பட)
2) ஒவ்வொரு உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்.
3) X, Y உற்பத்திப் பொருட்களின் அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம்.
4) விற்பனை விலையில் 20% இனை இலாபமாக உள்ளடக்கி X, Y ஆகிய உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலை?

(25 புள்ளிகள்)

03. மதி என்பவரின் வணிகத்தின் ஏடுகளில் 2021 ஜனவரி 01ந் திகதி சொத்துக்கள் பொறுப்புக்களின் பெறுமதிகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| கட்டடம் | ரூபா 300000 |
| மோட்டார் வாகனம் | ரூபா 200000 |
| வியாபாரச் சரக்கிருப்பு | ரூபா 60000 |
| வியாபார வருமதிகள் | ரூபா 25000 |
| முற்பண வாடகை | ரூபா 5000 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | ரூபா 30000 |
| காசு மீதி | ரூபா 45000 |
| வங்கிக் கடன் | ரூபா 100000 |
| மூலதனம் | ? |

2021 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

| | | |
|---|---|---|
| I | ஜனவரி 01 | உரிமையாளர் தனது ரூபா 200,000 பெறுமதியான கட்டடத்தையும் ரூபா 100000 காசினையும் மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தினார். |
| II | ஜனவரி 03 | கடனுக்கு விற்கப்பட்ட பண்டங்களின் பட்டியல் பெறுமதி ரூபா 80000 பட்டியல் பெறுமதியில் 5% வியாபாரக் கழிவு வழங்குனரால் வழங்கப் பட்டது. |
| III | ஜனவரி 05 | காசாகச் செலுத்திய வாடகைக் கட்டணம் ரூபா 10000 வருட ஆரம்பத்தில் காணப்பட்ட வாடகை முற்பணம் ஜனவரி மாத வாடகைகளின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. |
| IV | ஜனவரி 15 | வியாபார வருமதியாளரிடம் அவரின் மாத ஆரம்பத்தில் காணப்பட்ட கடன் தொகை முழுவதும் 5% கழிவு கொடுத்து அறவிடப்பட்டது. |
| V | ஜனவரி 18 | வியாபாரக் கொடுக்குமதிகளுக்கு 10% கழிவு பெற்றுக் கொண்டு செலுத்திய காசு ரூபா 27000 |
| VI | ஜனவரி 20 | ரூபா 30000 கிரயமான பண்டங்கள் ரூபா 45000இற்கு பட்டியல் விலையிட்டு காசுக்கு விற்கப்பட்டது. காசு விற்பனையின்போது பட்டியல் விலையில் 10% வியாபாரக் கழிவு வழங்கப்படும். |
| VII | ஜனவரி 22 | ஜனவரி மாத தொலைபேசிக் கட்டணம் ரூபா 8000 ஆகும். இதில் ரூபா 3000 காசாகச் செலுத்தப்பட்டது. |
| VIII | ஜனவரி 25 | நிறுவனம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு புத்தகப் பெறுமதியில் வருடாந்தம் 12% பெறுமானத் தேய்விடப்படுகின்றது. |
| IX | ஜனவரி 30 | வங்கிக் கடனின் ஒரு பகுதி ரூபா 1500 ஜனவரி மாத வட்டியுடன் மீளச் செலுத்தியது ரூபா 30,000 |
| X | ஜனவரி 31 | நிறுவனத்தின் இருப்புக்களின் தேறிய நிகர பெறுமதி ரூபா 100000 ஆகக் காணப்பட்டது. |

**வேண்டப்படுவது:**

1) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையிலுள்ள உருப்படிகளின் தாக்கத்தினைக் (பெறுமதிகளுடன்) காட்டுவதுடன், ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (-) எனவும் அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக. (இவ்வினாவிற்கு விடையளிப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.)

| நடவடிக்கை இல. | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | முற்பணக் கொடுப்பனவுகளும் முற்செலுத்தியவைகளும் | காசு | நீண்ட காலக் கடன்கள் | வியாபாரக் கொடுக்குமதிகள் | ஒட்டுறு செலவுகள் | உரிமையாண்மை |
| ஆரம்ப மீதி | | | | | | | | | |
| (i) | | | | | | | | | |
| (ii) | | | | | | | | | |
| ……….. | | | | | | | | | |
| ……….. | | | | | | | | | |
| இறுதி மீதி | | | | | | | | | |

2) வணிகத்தின் *31.01.2021* இல் முடிவடைந்த மாத்திற்கான வருமானக் கூற்று.

3) மேலே தரப்பட்ட உருப்படிகளில் (iii), (iv), (v), (vii), (ix) ஆகியவற்றைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் (விளம்பல் உட்பட)

*(20 புள்ளிகள்)*

*04.* (அ) நன்னெறி இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் *2021.03.31* இல் முடிவடையும் வருடத்தில் இடம்பெற்ற காசுப்பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பின்வருமாறு.

**கொள்ளல் கொடுத்தல் கணக்கு / காசுக் கணக்கு**

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| *2020.04.01* காசு | *50,000* | பராமரிப்புச் செலவு | *20,000* |
| அங்கத்தவர் சந்தா | *50,000* | சிற்றுண்டிச்சாலை உணவு | *60,000* |
| சிற்றுண்டிப் பெறுவனவு | *100,000* | தொலைபேசிக் கட்டணம் | *10,000* |
| ஆயுள் அங்கத்தவர் சந்தா | *60,000* | ஊழியர் சம்பளம் | *70,000* |
| பிரவேசக் கட்டணம் | *20,000* | எழுது கருவிகள் | *15,000* |
| சொத்துக்கள் வாடகை | *55,000* | சிற்றுண்டிச்சாலைச் செலவுகள் | *8,000* |
| | | அச்சடித்தல் செலவு | *10,000* |
| | | பத்திரிகை | *2,000* |
| | | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | *12,000* |
| | | வங்கிக் கடன் வட்டி | *20,000* |
| | | *2021.03.31* இல் மீதி | *108,000* |
| | ***335,000*** | | ***335,000*** |

*2020.04.01 இல் காணப்பட்ட மீதிகள்*

| | |
|---|---|
| - கட்டடம் | 100,000 |
| - விளையாட்டு மைதானம் | 250,000 |
| - தளபாடம் | 50,000 |
| - வங்கிக்கடன் | 200,000 |

ஏனைய தகவல்கள்:

1) 2020.04.01 இலிருந்து ஆயுள் அங்கத்துவ முறை செயற்படுத்தப்படுவதுடன் அத்தொகையில் 4000 ரூபாவை மட்டும் வருமானமாக பகிர்ந்தளிப்பதற்கு அங்கத்தவர்கள் உடன்பட்டனர்.
2) பிரவேசக் கட்டணங்களில் 2000 ரூபாவினை வருடத்தின் வருமானமாகக் கருதப்படுதல் வேண்டும்.
3) வருட அங்கத்துவக் கட்டணம் ஒருவருக்கு ரூபா 1000 ஆகும். 2021.03.31இல் அங்கத்தவர் எண்ணிக்கை 50 ஆகும். இவ்வருடத்தில் புதிதாக 15 அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப் பட்டதுடன் இதில் 5 பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாவர். ஒருவரின் ஆயுட்கால அங்கத்துவக் கட்டணம் ரூபா 12000 ஆகும்.
4) 2019/2020க்காக இவ்வாண்டில் பெற்ற அங்கத்துவச் சந்தா ரூபா 7000 2021/2022 ற்காக பெற்ற அங்கத்துவக் கட்டணம் ரூபா 5000 காசாகப் பெற்ற அங்கத்துவச் சந்தாவில் உள்ளடக்கப்பட் டுள்ளது.
5) 2020.04.01ம் திகதியில் சிற்றூண்டிச்சாலையின் உணவு இருப்பு ரூபா 12000 மாக இருந்ததுடன் 2021.03.31ம் திகதியில் ரூபா 10,000 ஆகவும் இருந்தது. அன்றைய திகதியில் தளபாடங்களின் பெறுமானம் 10% குறைவடைந்திருந்தது.
6) பணியாளர் சம்பளத்தில் 20% சிற்றூண்டிச்சாலை பணியாளர்களுக்குரியது. பின்வருவன வற்றைத் தயாரிக்குக.

   2021.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
   1) அங்கத்துவச் சந்தாக் கணக்கு
   2) சிற்றூண்டிச்சாலை வருமானக்கூற்று
   3) நன்னெறி இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் வருமானக் கூற்று
   4) 2020.04.01 திகதியில் திரண்ட நிதி (10 புள்ளிகள்)

**ஆ)** சாந்தன் என்பவரினால் நடாத்திச் செல்லப்படுகின்ற “KN95 Mask” கொள்வனவு செய்து விற்பனை செய்கின்ற வணிகத்தின் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட மீதிகளும் கொடுக்கல் வாங்கல்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| 01.04.2021 இல் மீதி | ரூ. ‘000’ |
|---|---|
| காசு | 180 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 60 |
| செலுத்த வேண்டிய VAT | 15 |
| சென்மதி மின்சாரக் கட்டணம் | 5 |

2021 ஏப்ரல் மாதத்தினுள் இடம்பெற்ற காசுக் கொடுப்பனவுகளும் மற்றும் கடன் கொள்வனவு களும் பின்வருமாறு.

02.04.2021 காப்புறுதிக் கட்டணம் செலுத்தியது ரூ. 10,000

03.04.2021 சென்மதி மின் கட்டணம் உட்பட மின்சாரக் கட்டணமாக ரூ.11000 செலுத்தப்பட்டது. ஏப்ரல் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 6000 ஆகும்.

06.04.2021 KN95 Mask கொள்வனவுகள் ரூபா 160,000

08.04.2021 வாசனிடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட KN 95 Mask இன் பெறுமதி ரூபா 85,000 வியாபாரக் கழிவு ரூ. 5000

*15.04.2021 ஆராவிடம் இருந்து ரூபா 60000 இற்கு KN95 Mask கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.*

*20.04.2021 ஆராவின் கடனில் ரூபா 50,000ஐ செலுத்தியபோது பெற்ற கழிவு ரூ. 2000 ஆகும்.*

*25.04.2021 வாசனின் கடனில் ரூ. 80000ஐ செலுத்தியபோது பெற்ற கழிவு ரூபா 3000 ஆகும்.*

**மேலதிக தகவல்கள்**

1) மேற்குறிப்பிட்ட வணிகமானது VAT இற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் கொள்வனவு விற்பனையில் VAT வீதம் 15% ஆகும்.
2) மேலே தரப்பட்ட கொள்வனவு விற்பனவுகளில் VAT உள்ளடக்கப்படவில்லை.
3) 30.04.2021 காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 400000 ஆகும்.

**வேண்டப்படுவது.**

1) மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் நாளேடுகளில் (மூலப் பதிவேடுகள்) பதிவு செய்க.
   i) காசு கொடுப்பனவு நாளேடு
   ii) கொள்வனவு நாளேடு

2) பொதுப் பேரேட்டில் பின்வரும் கணக்குகள்
   i) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
   ii) கொள்வனவுக் கணக்கு
   iii) வியாபாரக் கொடுக்குமதிகள் கணக்கு
   iv) வருமதி VAT கணக்கு (10 புள்ளிகள்)

05. (அ) 31.03.2020 இல் உள்ளவாறான நந்தன், விந்தன், சாந்தன் என்பவர்களது பங்குடைமையின் சுருக்கிய நிதிநிலைமைக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **சொத்துக்கள்:** | **(ரூ. 000)** |
| கொண்டு செல் தொகையில் ஆதனம், பொதி மற்றும் உபகரணம் | 6000 |
| இருப்புகள் | 1000 |
| வியாபார வருமதிகள் (வியாபாரக் கடன்பட்டோர்) | 1500 |
| வங்கியிலுள்ள காசு | 500 |
| | 9000 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்:** | |
| மூலதனக் கணக்குகள்: | |
| நந்தன் | 3000 |
| விந்தன் | 3000 |
| சாந்தன் | 2000 |
| **நடைமுறைக் கணக்குகள்** | |
| நந்தன் | 350 |
| விந்தன் | 330 |
| சாந்தன் | 80 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் (வியாபாரக் கடன் கொடுத்தோர்) | 240 |
| | 9000 |

**மேலதிக தகவல்கள்:**

i) நந்தன், விந்தன், சாந்தன் என்பவர்களது பங்குடைமை உடன்படிக்கை பின்வருமாறு:

- இலாப நட்டங்கள் நந்தன், விந்தன், சாந்தன் ஆகியோர்களுக்கிடையில் முறையே *3:2:1* எனும் விகிதத்தில் பதிவு செய்யப்படும்.
- ஒவ்வொரு பங்காளரும் மாதச் சம்பளமாக ரூ. *10,000* பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
- பங்காளர்கள் தங்களது மூலதனக் கணக்கில் ஆரம்ப மீதிகளுக்கு 5% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

ii) *01.04.2020* இல் நந்தன் பங்குடைமையில் இருந்து இளைப்பாறினார். இத்தினத்தில் அவருக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டிய தொகையை கடன் கணக்கிற்கு மாற்றுவதற்கும் அதற்கு வருடாந்தம் 10% வட்டி செலுத்துவதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நடைமுறை ஆண்டுக்கான வட்டி செலுத்தப்படல் வேண்டும்.

iii) *01.04.2020* இல் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ. *900,000* என மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்பானது கணக்குப் புத்தகங்களில் ஒரு சொத்தாக பதியப்படுவதில்லை. அத்துடன் நன்மதிப்பு தொடர்பான எல்லாச் சீராக்கங்களும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

iv) *01.04.2020* இல் இருந்து விந்தனும், சாந்தனும் இலாப நட்டத்தை முறையே *2:1* எனும் விகிதத்தில் பகிர்வு செய்து பங்குடைமையை தொடர்ந்து நடாத்த தீர்மானித்தனர். சம்பளம், மூலதன வட்டி தொடர்பாக ஏற்கனவே செய்த உடன்படிக்கையயில் மாற்றம் எதுவுமில்லை.

v) *31.03.2021* இல் முடிவடைந்த வருடத்திற்கான விந்தன், சாந்தன் ஆகியோரின் பங்குடைமையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **ரூ. 000** |
|---|---|
| விற்பனைகள் (இவற்றுள் 60% கடனடிப்படையிலானதாகும்) | *6000* |
| கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு ………… | *2500* |
| கொள்வனவுகள் (இவற்றுள் 80% கடனடிப்படையிலானதாகும்) | *3000* |
| கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு………. | *1240* |
| செயற்பாட்டுச் செலவுகளுக்குச் செலுத்திய காசு | *520* |
| ஆதனம், பொறி, உபகரண பெறுமானத் தேய்வு……….. | *1000* |
| பற்றுக்கள் (ஒவ்வொரு பங்காளரும் ரூ. *60000* வீதம்)…… | *120* |

vi) *31.03.2021* இல் உள்ளவாறான சரக்கிருப்புக்களின் பெறுமதி *750000* ஆகும்.

**வேண்டப்படுவது:**

1) விந்தன், சாந்தன் என்பவர்களது பங்குடைமையின் *31.03.2021*இல் முடிவடைந்த வருடத்திற் கான வருமானக்கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)

2) விந்தன், சாந்தன் பங்குடைமையில் வியாபார வருமதிகள், பொறுப்புக்கள், பங்காளர்களின் மூலதன நடைமுறைக் கணக்குகள் ஆகிய மீதிகளைக் காட்டும் *31.03.2021* இல் உற்றவாறான பிரித்தெடுக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்று. (10 புள்ளிகள்)

(ஆ) தேனு பொதுக் கம்பனியின் 31.03.2021 மற்றும் 31.03.2020 ஆகிய இரு ஆண்டுகளுக்குமான பொழிப்பாக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ரூ. "000")

| | 31.03.2021 | 31.03.2020 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 15,800 | 14,100 |
| திரண்ட தேய்வு | (1,200) | (800) |
| | 14,600 | 13,300 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| இருப்பு | 1,500 | 1,400 |
| வியாபார வருமதிகள் | 1,800 | 2000 |
| காசு மீதி | 410 | 510 |
| | 18310 | 17210 |
| **உரிமையாண்மை:** | | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 9500 | 8000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 600 | 400 |
| பொது ஒதுக்கம் | 500 | 1000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 3100 | 1200 |
| | 13700 | 10600 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்:** | | |
| வங்கிக் கடன் | 2400 | 4800 |
| **நடைமுறைப் பொறுப்புகள்:** | | |
| வியாபார கொடுக்குமதிகள் | 1750 | 1600 |
| செலுத்த வேண்டிய வரிகள் | 250 | 100 |
| செலுத்தவேண்டிய நிதிச் செலவுகள் | 210 | 110 |
| | 18310 | 17210 |

**31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றங்களிற்கான கூற்று.**

(ரூ "000)

| | சாதாரண பங்குகள் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | நிறுத்தி வைத்த வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01.04.2020 இல் மீதி | 8000 | 400 | 1000 | 1200 | 10600 |
| பங்கு வழங்கல் | 1000 | - | - | - | 1000 |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | 500 | - | (500) | - | - |
| மொத்த முற்று மடங்கிய வருமானம் | - | 200 | - | 2100 | 2300 |
| செலுத்திய பங்கு லாபம் | - | | - | (200) | (200) |
| 31.03.2021 இல் மீதி | **9500** | **600** | **500** | **3100** | **13700** |

**மேலதிக தகவல்கள்:**

i) வருடத்தினுள் ரூபா 1200.000 கிரயம் கொண்ட மோட்டார் வாகனமொன்று ரூபா 10000 இலாபம் வைத்து, ரூபா 500000 இற்கு விற்கப்பட்டு புதிய இயந்திரமொன்று கொள்ளவு செய்யப்பட்டது. மோட்டர் வாகன விற்பனையின் மூலமான ஆதாயம் ரூபா 10000ஆகும்.

ii) வருடத்தினுள் வருமான வரியாக ரூபா 125000வும், வட்டியாக ரூபா 50000வும் செலுத்தப் பட்டது.

**வேண்டப்படுவது:**

தேனு பொதுக் கம்பனியின் *31.03.2021*இல் முடிவடைந்த வருடத்திற்கான LKAS 07 (காசுப் பாய்ச்சல் கூற்று) இற்கேற்ப காசுப் பாய்ச்சல் கூற்று.

*(10 புள்ளிகள்)*

*06.* அ) பின்வரும் தகவல்கள் வரையறுக்கப்பட்ட தீபா பொதுக் கம்பனியுடன் தொடர்பானவையாகும்.

| விபரம் | 31.03.2021 இல் உள்ளபடி (ரூ. "000) | 31.03.2020 இல் உள்ளபடி (ரூ. "000) |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | *540* | *420* |
| சரக்கிருப்புகள் | *1800* | *2200* |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | *660* | *380* |
| வியாபார கொடுக்குமதிகள் | *1200* | *1800* |
| செலுத்த வேண்டிய வட்டி | *300* | *200* |

| 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கானது: | ரூ. 000 |
|---|---|
| மொத்த விற்பனைகள் | *8000* (இதில் 60% ஆனவை கடன் விற்பனையாகும்) |
| கொள்வனவு | *3600* |
| இலாபம் | *2400* |

வருடமொன்றுக்கான வேலை நாட்களின் எண்ணிக்கை *360* எனக் கருதுக.

**வேண்டப்படுவது:**

*31.03.2021* இல் முடிவடைந்த வருடத்திற்கான:

1) தேறிய இலாப விகிதம்
2) மொத்த இலாப விகிதம்
3) நடைமுறை விகிதம்
4) வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) புரள்வு விகிதம்
5) இருப்பு வைத்திருத்தல் காலம் *(5 புள்ளிகள்)*

ஆ) கம்பனியொன்று தனது பயன்பாட்டில் இருந்த பொறியினை அகற்றி புதியபொறி ஒன்றினை வாங்குவதற்கு தீர்மானித்துள்ளது புதிய பொறி தொடர்பான மதிப்பிடப்பட்ட கிரயங்கள் வருமாறு:

| | (ரூ. "000") |
|---|---|
| பொறியின் கொள்வனவு விலை | *5000* |
| பொருத்துதல் செலவு | *350* |
| பொறியினைக் கொண்டு வரும் செலவு | *150* |
| தளம் அமைத்தல் செலவு | *700* |
| பழைய பொறியின் விற்பனை விலை | *800* |

**மேலதிக தகவல்கள்:**

1) புதிய பொறியானது *5* வருடங்கள் பயன்படுத்தப்படமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பொறியின் இழிவுப் பெறுமதி ரூபா *400000* ஆகும்.
2) புதிய பொறியின் கொள்வனவின் காரணமாக தொழிற்படும் மூலதனம் ரூபா *300000* தினால் அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு செயற்றிட்டத்தின் முடிவில் தேறும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

3) எதிர்வரும் 5 வருடங்களிற்கான மதிப்பிடப்பட்ட செயற்றிட்டக் காசுப் பாய்ச்சல்கள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டன.

**(ரூபா '000')**

| **வருடம்** | **1** | **2** | **3** | **4** | **5** |
|---|---|---|---|---|---|
| **காசுப் பெறுவனவு** | 3,600 | 4,600 | 4,800 | 4,400 | 4,500 |
| **காசுக் கொடுப்பனவு** | 1,200 | 1,600 | 2,200 | 2,600 | 2,300 |

4) முதலீட்டிற்கான 10% கழிவுக் காரணி பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| **கழிவுக் காரணி** | 0.9 | 0.8 | 0.7 | 0.6 | 0.5 |

**வேண்டப்படுவது:**

1) செயற்றிடடக் காசுப் பாய்ச்சலை செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து கணிப்பிட்டுக் காட்டுக.
2) புதியபொறி தொடர்பான செயற்றிட்டத்தின் தேறிய நிகழ் காலப் பெறுமதி (5 புள்ளிகள்)

இ) கம்பனி ஒன்று பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதற்காக, இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களைப் பொருத்தி கணினிகளை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. இக்கணினி ஒன்றின் விற்பனை விலையானத ரூ. 50000 ஆக இருக்குமெனத் தீர்மானிக்கப்பட் டுள்ளதுடன் எதிர்பார்க்கப்படும் கிரயங்கள் பின்வருமாறு உள்ளன.

அனுமதிப் பத்திர கட்டணம் ................................ மாதாந்தம் ரூ. 50000

சம்பளங்கள்:

மேற்பார்வையாளர்கள் ...................................... மாதாந்தம் ரூ. 80000

பொருத்தும் ஊழியர்கள் ................................... அலகொன்றுக்கு ரூ. 8000

வாடகை ....................................................... வருடாந்தம் ரூ. 360000

காப்புறுதி .................................................... மாதாந்தம் ரூ. 40000

மூலப் பொருட் கிரயம் ..................................... அலகொன்றுக்கு ரூ. 12000

ஆலோசகர்கள் இருவருக்கான கட்டணங்கள் ........... மாதாந்தம் ரூ. 100000

**வேண்டப்படுவது:**

1) மாதாந்த மொத்த நிலையான கிரயம் (ஒவ்வொரு உருப்படியையும் தனித்தனியாகக் குறிப்பிடுக)
2) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் விற்பனை செய்யவேண்டிய கணினிகளின் எண்ணிக்கை.
3) ரூ. 150000 இலாபம் ஈட்டுவதற்கு மாதாந்தம் விற்பனை செய்யவேண்டிய கணினிகள் எண்ணிக்கை.
4) பொருத்தும் ஊழியர்களுக்கு அலகு அடிப்படையிலான சம்பளத்திற்கு பதிலாக மொத்த மாதாந்த சம்பளமாக ரூ. 80000 செலுத்தப்படின் மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் விற்பனை செய்யவேண்டிய கணினிகளின் எண்ணிக்கை.
5) கணினிகளைப் பொருந்துவதற்கு தானியங்கி வசதிகளை ஏற்படுத்துவதன் காரணத்தினால் பொருத்தும் ஊழியருக்குரிய அலகு ஒன்றுக்கான சம்பளமானது ரூ. 3000 ஆகக் குறைக்ககப் படுமாயின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் விற்பனை செய்ய வேண்டிய கணினிகளின் எண்ணிக்கை தானியங்கி வசதிகளை ஏற்படுத்துவதனால் வருடாந்த நிலையான கிரயமானது ரூ. 180000 இனால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)